# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 2 / 2022** நாள்: 12.01.2022

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களுக்கு பயிற்சிகள் வழங்குதல், தேர்தலை அமைதியான முறையில் நடத்துதல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் இன்று (12.1.2022) பிற்பகல் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.**

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு நடத்தப்பெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களுக்கு, தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்தும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் அமைதியான முறையில் நடத்துதல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இன்று (12.1.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

19.1.2022 அன்று மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்களுக்கு இவ்வாணையத்தால் காணொலி மூலம் பயிற்சி வழங்கப்பட உள்ளது. அதன்பின், 9.12.2021 அன்று வெளியிடப்பட்ட 17 மாநகராட்சிகள், 110 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர்

பட்டியல்களில் உள்ள திருத்தங்கள் ஏதும் இருப்பின் சரிசெய்வது, 10.1.2022 அன்று வெளியிடப்பட்ட 4 மாநகராட்சிகள், 28 நகராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் உள்ள திருத்தங்கள் ஏதும் இருப்பின் சரிசெய்வது, மேலும், 5.1.2022 அன்று வெளியிடப்பட்ட சட்டமன்ற நிறைவு சிறப்பு சுருக்க பட்டியல் 2022ன்படி புகைப்பட வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் பணிகள் ஆகியவற்றினை 24.1.2022க்குள் முடித்திட தெரிவிக்கப்பட்டது. மேலும், வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதி நாள் வரை சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் சேர்த்தல்/நீக்கல்/ மாற்றங்களை, துணைப்பட்டியல்கள் வெளியிட்டு சரிசெய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்காணித்திட தெரிவிக்கப்பட்டது. புகைப்பட வாக்காளர் பட்டியலில் முக்கிய பிரமுகர்களின் பெயர்கள் விடுதலின்றி இருப்பதை உறுதி செய்திடவும், இவ்வாணையத்தால் அறிவுறுத்தியவாறு சிசிடிவி மற்றும் வெப்- கேமிரா பதிவுகள் மற்றும் பறக்கும் படை அமைத்திடவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கோவிட்-19 தொற்று காரணமாக தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலரின் reserve list தயார் நிலை குறித்தும், தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு இரண்டு கோவிட் தடுப்பூசி செலுத்தி, 9 மாதங்கள் கடந்திருப்பின், பூஸ்டர் தடுப்பூசி செலுத்திட தெரிவித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வைக்கப்படும் வாக்குச்சீட்டு அச்சடிக்க அச்சகம் தெரிவு செய்யப்பட்ட விவரம், தேர்தல் அறிவிப்பாணை வெளியானதிலிருந்து Model Code of Conduct கடைபிடித்திட தயார் நிலையில் இருந்திடவும், வேட்பு மனு தாக்கல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு 2 மற்றும் 3-ஆம் (EVM Randomization) சீரற்றமயமாக்கல், மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான (Polling Personnel Randomization) சீரற்றமயமாக்கல் தொடர்பான பயிற்சிகள் வழங்கிய விவரம், தேர்தல் தொடர்பான வழக்குகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி. அ. சுப்பிரமணியம், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார், மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

12/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்